# துவாக்குடி நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of Council |
|---|---|---|---|
| 18.08.2017 | | 2017ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18–ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து ஆலோசித்து முடிவெடுக்க அவசரக்கூட்டம்நடைபெறும்.<br>**தனி அலுவலர்,**<br>**துவாக்குடி நகராட்சி.** | |
| 18.08.2017 | 71 | **<u>பொருள் எண். 1</u>**<br>2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் படி கேளிக்கை வரி விலக்களிப்பது குறித்தோ அல்லது தள்ளுபடி செய்வது குறித்தோ தீர்மானம் நிறைவேற்றுவது.<br>1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்கள் உள்ளிட்ட ஏனையை கேளிக்கைகள் மீது கேளிக்கை வரி விதித்து வசூலிக்கப்பட்டு வந்தன. இந்த சட்டம் நீக்கரவு செய்யப்பட்ட நிலையில், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கை வரிச்சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டமானது 1.7.2017 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகள் திரைப்படங்கள் உள்ளிட்ட கேளிக்கைகள் மீது வரி விதிப்பதற்கும், வசூலிப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, தமிழ் திரைப்பட வர்த்தக சபை, தமிழ்நாடு திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கம், தமிழ் திரைப்பட சம்மேளனம், தென்னிந்திய திரைப்பட சபை ஆகிய சங்கங்கள் கேளிக்கைகள் வரியினை ரத்து செய்யவும், திரைப்படத்திற்கான நுழைவுச் சீட்டினுடைய விலையினை உயர்த்தவும் மற்றும் சில கோரிக்கைகளை அரசுக்கு வைத்து உள்ளனர். இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி, எந்த ஒரு கேளிக்கை அல்லது கேளிக்கைகளின் வகைகள் மீது விதிக்கப்படும் கேளிக்கை வரியிலிருந்து உள்ளாட்சிமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில், அரசு பொருத்தமெனக் கருதும் நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களிக்கலாம் அல்லது கேளிக்கைகள் மீது விதிக்கப்பட்ட வரியை தள்ளுபடி (Remission) செய்யலாம். இச்சங்கங்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிப்பதற்கு ஏதுவாக உள்ளாட்சி மன்றங்களின் கருத்துகளைப் பெற்று அனுப்புமாறு அரசு கேட்டுக் கொண்டுள்ளதன் அடிப்படையில் (அரசு கடித எண்.14781 / தேர்தல் / 2017–1, நாள்: 1.8.2017) நகராட்சி நிர்வாக ஆணையர் அதனை மேலனுப்பி மன்றத்தின் கருத்துக்களையும், பரிந்துரைகளையும் அனுப்பி வைக்குமாறு கேட்டு கொண்டுள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | **<u>அலுவலக குறிப்பு</u>** – மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். 370 / சி1 / 2013** | |
| 18.08.2017 | 72 | திருவெறும்பூர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2017–18 ம் ஆண்டிற்கு துவாக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் 2 குடிநீர் பணிகள் மேற்கொள்ள திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். செ.மு.ஆ.எண். 1814/2017/அ3 நாள். 12.07.2017 – ல் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட 2 குடிநீர் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தினை 07.08.2017–ம் தேதி தினத்தந்தி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு பிரைட் அட்வர்டைசிங் நிறுவனத்தின் பில் பட்டியல் படி ரூ. 3360/– வழங்கியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**ந.க.எண். 752/2017/இ1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 73 | **<u>பொருள் எண். 3</u>**<br><br>துவாக்குடி நகராட்சியில் 2016–17 –ம் ஆண்டிற்கு நான்கு காலாண்டுகளுக்கு ஒப்பந்ததாரர்களின் வேலையில் பிடித்தம் செய்யப்பட்டு கட்டப்பட்ட வருமானவரி விவரத்தினை வருமான வரி அலுவலகத்தில் பதிவு செய்து, ஒப்பந்ததாரர்களுக்கு நான்கு காலாண்டுகளுக்குரிய TDS Certificate (16 A) பெற்று தருவதற்கு கட்டணமாக ரூ. 16,800/– தொகை ALAYAM ASSOCIATES நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**ந.க.எண். 254 /2015/சி1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| 18.08.2017 | 74 | **<u>பொருள் எண். 4</u>**<br>துவாக்குடி நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18 ம் ஆண்டுக்கு கீழ்கண்ட இரண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ள இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண். அ3./1814/2017 நாள். 12.07.2017–ல் நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**ந.க.எண். 752 /2017/இ1** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு</u> : – மன்றம் அனுமதி வழங்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>18.08.2017</td>
<td>75</td>
<td><u>பொருள் எண். 5</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2017–18 ம் ஆண்டுக்கு கீழ்கண்ட இரண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ள இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண். அ3./1814/2017 நாள். 12.07.2017–ல் நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து 18.08.2017 ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் விபரம்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்ச த்தில்)</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப் புள்ளி சதவீதம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">துவாக்குடி நகராட்சி வார்டு எண். 15 முத்துராமலிங்க தேவர் சாலையிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து அண்ணாநகர் மெயின்சாலை மற்றும் குறுக்கு சாலைகளுக்கு குடிநீர் குழாய் அமைத்தல்.</td><td rowspan="2">8.00</td><td>ஆர். சிவக்குமார்</td><td>மதிப்பீட்டை விட 0.09 % குறைவு</td></tr>
<tr><td>எம். ஜீவானந்தம்</td><td>மதிப்பீட்டை விட 1.66 % அதிகம்</td></tr>
<tr><td rowspan="2">2.</td><td rowspan="2">துவாக்குடி நகராட்சி வார்டு எண். 15 முத்துராமலிங்க தேவர் சாலை வன்னியர் நகர், பழைய கருப்பு கோவில் தெரு மற்றும் குறுக்கு தெருக்களுக்கு குடிநீர் குழாய் அமைத்தல்.</td><td rowspan="2">7.00</td><td>ஆர். சிவக்குமார்</td><td>மதிப்பீட்டை விட 0.08 % குறைவு</td></tr>
<tr><td>எம். ஜீவானந்தம்</td><td>மதிப்பீட்டை விட 2.10 % அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு</u> : – குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். சிவக்குமார் ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதித்து வேலை உத்திரவு வழங்கலாம்.<br>ந.க.எண். 752 /2017/இ1</td>
<td><u>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u></td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 18.08.2017 | 76 | <u>**பொருள் எண். 6**</u><br>துவாக்குடி நகராட்சியின் எல்லைக்கு அருகில் உள்ள ஊராட்சி மற்றும் பேரூராட்சியில் உள்ள பகுதிகளை இணைத்து தரம் உயர்த்துதல் தொடர்பான ஆய்வறிக்கையினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண். 2074/2017/எம் 1 நாள். 11.07.2017–ல் அனுப்ப கோரியுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி எல்லைப்பகுதியினை ஒட்டியுள்ள வாழவந்தாண்கோட்டை மற்றும் கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சியினை நகராட்சியுடன் இணைக்கவும் மேலும் துவாக்குடி நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் பாரத மிகு மின் நிறுவனத்தின் ( BHEL ) தொழிற்சாலைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் 80 சதவீதம் நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது, மீதமுள்ள 20 சதவீத பகுதியில் உள்ள குடியிருப்புகள், தொழிற்சாலைகள் கூத்தைப்பார் பேரூராட்சி, நவல்பட்டு ஊராட்சி பகுதிகளில் அமைந்துள்ளது. எனவே மேற்கண்ட ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சியினை துவாக்குடி நகராட்சியுடன் இணைத்து நகராட்சியினை தரம் உயர்த்துவதற்கு உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**ந.க.எண். 1012 /2017/சி1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 77 | <u>**பொருள் எண். 7**</u><br>துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான ஜேசிபி வாகனம் TN 45 BY 2588 –க்கு வருடாந்திர காப்பீட்டு 10.09.2017–ல் முடிவடைவதால் மேற்கண்ட வாகனத்திற்கு வருடாந்திர காப்பீடு தொகை செலுத்த உத்தேச செலவினம் ரூ. 17000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**ந.க.எண். 608 /2014/இ1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 78 | <u>**பொருள் எண். 8**</u><br>துவாக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TN 45 AY 0474 என்ற வண்டியின் பழுதுகளை நீக்கம் செய்ய தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி 14.07.2017–ல் கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br>1. ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சிராப்பள்ளி – ரூ. 20,000/–<br>2. ரீட்டா ஆட்டோ கேரேஜ், திருச்சிராப்பள்ளி – ரூ. 22,500/–<br>3. டோமினிக் ஆட்டோ கேரேஜ், திருச்சிராப்பள்ளி – ரூ. 25,000/–<br>வரிசை எண். 1–ல் கண்டுள்ள விவரப்படியான ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் திருச்சிராப்பள்ளி என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | ந.க.எண். /2017/எச்1<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| 18.08.2017 | 79 | **பொருள் எண். 9**<br>துவாக்குடி நகராட்சி வார்டு எண். 1 முதல் 6 –வது வார்டு வரை உள்ள அழ்குழாய் கிணறு இந்தியா மார்க் 2 அடிபம்பு, மினிபவர் பம்பு மற்றும் குடிநீர் வினியோக பிரதான குழாய்கள் பழுதுகளை சரி செய்ய ரூ. 4.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**ந.க.எண். 975/2017/இ1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம். | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 80 | **பொருள் எண். 10**<br>துவாக்குடி நகராட்சி வார்டு எண். 7 முதல் 15 –வது வார்டு வரை உள்ள அழ்குழாய் கிணறு இந்தியா மார்க் 2 அடிபம்பு, மினிபவர் பம்பு மற்றும் குடிநீர் வினியோக பிரதான குழாய்கள் பழுதுகளை சரி செய்ய ரூ. 5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**ந.க.எண். 975/2017/இ1**<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம் | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 81 | **பொருள் எண். 11**<br>துவாக்குடி நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் திறப்பாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால் மேற்கண்ட பணியிடங்களுக்கு உரிய பணியாளர்களை 2017–18 ம் ஆண்டிற்கு சப்ளை செய்ய மதிப்பீடு தொகை ரூ. 6.70 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 968 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 18.08.2017 | 82 | **<u>பொருள் எண். 12</u>**<br>துவாக்குடி நகராட்சியில் பொறியியல் பிரிவில் மின்பணியாளர் மற்றும் மின் பணி உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால் மேற்கண்ட பணியிடங்களுக்கு உரிய பணியாளர்களை 2017–18 ம் ஆண்டிற்கு சப்ளை செய்ய மதிப்பீடு தொகை ரூ. 4.00 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 968 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 83 | **<u>பொருள் எண். 13</u>**<br>துவாக்குடி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு அனைத்து பிரிவுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் பிரிண்டர்களுக்கு 2017–18 ம் ஆண்டிற்கு டோனர் சப்ளை செய்வதற்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 1.50 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். இ1 / 976 / 2017** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 84 | **<u>பொருள் எண். 14</u>**<br>துவாக்குடி நகராட்சியின் 2016–17 ம் நிதியாண்டின் தணிக்கை செய்வதற்கு புதிய கணக்கு தலைப்பின் கீழ் பொது நிதி கணக்கு மற்றும் குடிநீர் நிதி கணக்குகள் தயார் செய்து கொடுத்தமைக்கு ரூ. 25000/– மற்றும் மாநில கணக்காயர் தணிக்கைக்கு 2014–15 முதல் 2016–17 வரை மூன்று ஆண்டுகளுக்கு வரவு செலவு அறிக்கை தயார் செய்து கொடுத்தமைக்கு ரூ. 5000/– ஆக மொத்தம் ரூ. 30000/– TACT COMPUTER ACCOUNTING SOFTWARE CENTRE நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். சி1 / 254 / 2015** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 18.08.2017 | 85 | **<u>பொருள் எண். 15</u>**<br>துவாக்குடி நகராட்சியின் 2015–16 –ம் ஆண்டு தணிக்கை கட்டணம் ரூ. 34193/– மட்டும் செலுத்த தெரிவித்து உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை திருச்சிராப்பள்ளி அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது, எனவே மேற்படியான தணிக்கைக் கட்டணம் ரூ. 34193/– ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண். அ1 / 11 / 2016** | |

| | | | |
|---|---|---|---|
| 18.08.2017 | 86 | <u>பொருள் எண். 16</u><br>துவாக்குடி நகராட்சி பகுதியில் வசிக்கும் அனைத்து மக்களும் 100 விழுக்காடு கழிப்பறைகளை மட்டுமே பயன்படுத்தி வருகின்றனர் என்றும், திறந்த வெளியினை கழிப்பிடமாக பயன்படுத்துவது இல்லை எனவும், இதற்காக அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களால் மலஜலம் கழிப்பதற்கு தங்கள் பள்ளிகளிலும், வீடுகளிலும் கழிவறையைத் தான் பயன்படுத்தி வருகின்றோம் எனவும், மேலும் இந்நகரில் இயங்கும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள வீடுகளிலும், கழிவறையைத் தான் பயன்படுத்தி வருகின்றோம் எனவும், மேலும் இந்நகரில் இயங்கும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் பகுதியிலுள்ள வீடுகளில் வீட்டு கழிப்பறை அல்லது அருகிலுள்ள சமுதாய/பொது கழிப்பறையைத்தான் பயன்படுத்தி வருகின்றோம் என உறுதிமொழி அளித்துள்ளனர்.<br><br>மேலும் துவாக்குடி நகராட்சி மூலம் வார்டு 0வாரியான விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பெற்று பொது மக்கள் தங்கள் வீடுகளிலுள்ள கழிப்பறைகள் அல்லது பொது கழிப்பிடங்களையே பயன்படுத்தி வருகிறோம் என உறுதிமொழி அளித்துள்ளனர்.<br><br>மேலும் தினசரி பத்திரிக்கையில் துவாக்குடி நகராட்சியில் வசிக்கும் பொது மக்கள் அனைவரும் கழிப்பறை தான் பயன்படுத்தி வருகின்றனர் என்று நகராட்சி சார்பில் விரைவில் அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது எனவும் இது குறித்து பொது மக்கள் தங்களது ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் 15 தினங்களுக்குள் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடிதம் மற்றும் மின்னஞ்சல் மூலமாக தெரிவிக்க கேட்டுப் பத்திரிக்கை விளம்பரம் மூலமும், வார்டு தோறும் விளம்பர பாதகைகள் வைக்கப்பட்டும் கேட்டுக் கொள்ளப்பட்டது.<br><br>எனவே துவாக்குடி நகராட்சி பகுதியில் 100 விழுக்காடு திறந்தவெளி கழிப்பிடமில்லா பகுதியாக தினசரி நாளிதழ்களில் அறிவிப்பு செய்யவும், அதற்கான பிரேரணையை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு : –** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**ந.க.எண். எச்1 / 1226 / 2015** | |

______________ X ______________